**பிப்ரவரி – 19**

# TNPSC துளிகள்

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயியின் முழு உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

# தேசியச் செய்திகள்

## CLCS – TUS : நீட்டிப்பு

- 12-வது ஐந்தாண்டு திட்டம் முடிவடைந்த பின்னரும் 2017-18 முதல் 2019-20 ஆம் ஆண்டு வரை கடனுடன் இணைக்கப்பட்ட மூலதன மானியம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தை (CLCS-TUS: Credit Linked Capital Subsidy and Technology Up-gradation Scheme) மேலும் மூன்று ஆண்டுகள் நீட்டிக்க பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது
    - சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தொழில்நுட்ப மேம்பாடு
    - சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்
    - உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் வீணாவதைக் குறைத்தல்
    - தொடர்ந்து மேம்படுத்துதலுக்கான கலாச்சாரத்தை ஊக்குவித்தல்

  ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- இத்திட்டமானது அங்கீகரிக்கப்பட்ட 51 துணைத் துறைகள் / பொருட்களின் நன்கு நிறுவப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை ஊக்குவிக்க 15 சதவிகித மூலதன மானியத்தை அளிக்கும்.

## மனிதக் கழிவுகளை அகற்றுவோருக்கான தேசிய ஆணையம்

- 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை பதவிக் காலம் உள்ள மனிதக் கழிவுகளை அகற்றுவோருக்கான தேசிய ஆணையத்தின் (NCSK - National Commission for Safai Karmacharis) பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கான பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மனிதக் கழிவுகளை அகற்றுவோருக்கான தேசிய ஆணையச் சட்டம், 1993-ல் உள்ள விதிமுறைகளின்படி 1993 ஆம் ஆண்டில் மனிதக் கழிவுகளை அகற்றுவோருக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டது.
- தொடக்கத்தில் 1997 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை உள்ள காலத்திற்கு மட்டுமே இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.
- பின்னர் இதன் வரம்பெல்லையானது 2002 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டது. அதன்பின்னர் இதன் வரம்பெல்லை 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி 29

வரை நீட்டிக்கப்பட்டது.

- NCSK சட்டமானது 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் தேதியுடன் காலாவதியானது. அதன் பின்னர் அவ்வப்போது சட்டப்பூர்வமற்ற அமைப்பாக NCSK-ன் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது.
- தற்பொழுதுள்ள NCSK ஆணையத்தின் பதவிக் காலமானது 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடையவிருக்கிறது.

## வெளிநாடு வாழ் இந்தியர்கள் திருமணப் பதிவு மசோதா, 2019

- வெளிநாடு வாழ் இந்தியர்கள் திருமணப் பதிவு மசோதா 2019ஐ அறிமுகப்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது இந்தியக் குடிமக்களில் பெரும்பாலும் வெளிநாடு வாழ் இந்தியப் பெண்களின் கணவர்களால் அவர்களது மனைவிகள் ஏமாற்றப்படுவதற்கு எதிராக அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் மற்றும் அதிக பொறுப்புடைமையை ஏற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த புதிய மசோதாவின்படி, வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் இந்தியக் குடிமக்களுக்கிடையே நிகழும் திருமணத்தை இந்தியாவிலோ அல்லது இந்தியத் தூதரகங்கள் அல்லது வெளிநாடுகளில் உள்ள இந்திய அலுவலகங்களிலோ திருமணம் நடந்து 30 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.
- இந்தத் திருமணத்தை 30 நாட்களுக்குள் பதிவு செய்யவில்லையெனில் வெளிநாடு வாழ் இந்தியரின் கடவுச் சீட்டு இரத்து செய்யப்படும். மேலும் அவர்களுக்கு அழைப்பாணை மற்றும் பிடியாணை உத்தரவு வழங்கப்படும்.
- இந்த மசோதா பின்வரும் சட்டங்களில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும்.
    - கடவுச் சீட்டுகள் சட்டம், 1967 மற்றும்
    - பிரிவு 86 A-ஐ இணைப்பதன் மூலம் உருவாக்கப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973.

## சுவச் சக்தி 2019

- புதுதில்லியில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் மார்க்கூக் மண்டலின் எராவல்லி கிராமம் 2019 ஆம் ஆண்டின் சுவச் சக்தி விருதை வென்றுள்ளது.
- இந்த விருதானது மத்திய அரசின் புகழ்பெற்ற திட்டமான சுவச் சுந்தர் சௌச்சாலயாவினால் வழங்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் சுவச் சக்தி என்பது நாடெங்கிலும் உள்ள பெண் பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் பெண் பஞ்சாயத்து தலைவர்களினால் கலந்து கொள்ளப்பட்ட ஒரு தேசிய நிகழ்ச்சியாகும். இதன் நோக்கம் பெண்களுக்கு அதிகாரமளித்தலாகும்.

## டாக்டர் அனூப் சத்பாத்தி குழு - அறிக்கை

- தேசிய அளவில் குறைந்தபட்ச ஊதியத்தை (NMW - National Minimum Wage) நிர்ணயிப்பதற்கான முறையை ஆய்வு செய்தல் மற்றும் பரிந்துரைத்தல் ஆகியவற்றிற்காக டாக்டர் அனூப் சத்பாத்தி தலைமையின் கீழ் ஒரு வல்லுநர் குழுவை

மத்திய தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் அமைத்துள்ளது.

- இந்த வல்லுநர் குழுவானது, "தேசிய அளவில் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான முறையைத் தீர்மானித்தல்" என்ற அறிக்கையை 14.02.2019 அன்று மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.
- இந்த அறிக்கையானது தேசிய அளவில் குறைந்தபட்ச ஊதியம் தேர்ந்தெடுக்கப்படும் முறை குறித்து முத்தரப்பு அமைப்புகளிடமிருந்து ஒப்புதலைப் பெறுவதற்காகவும் கலந்தறிவதற்காகவும் அமைச்சகத்தின் இணையதளத்தில் வைக்கப்பட்டுள்ளது.
- இந்தியத் தொழிலாளர் கருத்தரங்கு 1957-ன் ஒட்டுமொத்த வழிகாட்டுதல்கள் மற்றும் 1992 ஆம் ஆண்டின் தொழிலாளர் எதிர் ரெப்டாகோஸ் பிரெட் அண்ட் கோ வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்காக அறிவியல்பூர்வ முறையைப் பயன்படுத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### *குழுவின் பரிந்துரைகள்*

- தேசிய அளவில் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயிப்பதற்கு கலாச்சார ரீதியில் உண்ணக் கூடிய தகுந்த சரிவிகித சம உணவு முறை.
- குறைந்தபட்ச ஊதியமானது ஆடை, எரிபொருள் மற்றும் மின்சாரம், வீட்டு வாடகை போன்ற உணவுப் பொருள் அல்லாத இன்றியமையாத பொருட்களின் மீதான நியாயமான செலவினம் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| Region I | Region II | Region III | Region IV | Region V |
|---|---|---|---|---|
| Assam, Bihar, Jharkhand, Madhya Pradesh, Odisha, Uttar Pradesh and West Bengal | Andhra Pradesh, Telangana, Chhattisgarh, Rajasthan, Jammu & Kashmir and Uttarakhand | Gujarat, Karnataka, Kerala, Maharashtra and Tamil Nadu | Delhi, Goa, Haryana, Himachal Pradesh and Punjab | Arunachal Pradesh, Manipur, Meghalaya, Nagaland, Sikkim, Mizoram and Tripura |
| Rs 342 per day (Rs 8,892 per month) | Rs 380 per day (Rs 9880 per month) | Rs 414 per day (Rs 10,764 per month) | Rs 447 per day (Rs 11,622 per month) | Rs 386 per day (Rs 10, 036 per month) |

- 2018 ஆம் ஆண்டு ஜூலையின் படி ஒரு நாளைக்கு ரூ.375 என்ற ரீதியில் தேவையை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவிற்கென்று தேசிய அளவிலான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்தல் (மாதத்திற்கு ரூ.9750).
- ஒரு நாளைக்கு சராசரியாக ரூ.55 என்ற வீதம் கூடுதல் வீட்டு வாடகை படித் தொகையை அறிமுகப்படுத்துதல்.
- உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நாட்டின் வெவ்வேறான பகுதிகளுக்கு வெவ்வேறான தேசிய அளவிலான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்தல்.

## லேடிஸ் இணைய வாயில்

- நீர்வழிப் போக்குவரத்துகளை சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக லேடிஸ் (LADIS) என்ற புதிய தளத்தை இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (IWAI - Inland Waterways Authority of India) அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது கப்பல் மற்றும் சரக்குக் கப்பல் ஆகியவற்றின் நிகழ்நேரத் தகவல்களை அளிக்கும். எனவே அவற்றின் உரிமையாளர்கள் திட்டமிடப்பட்டவாறு தேசிய நீர்வழிப் பாதைகளில் பயணத்தை மேற்கொள்ள முடியும்.
- இது தேசிய நீர்வழிப் பாதைகளின் மீதான சிறந்த பயன்பாட்டை உறுதி செய்வதற்கான ஒரு படியாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## e-ஆஷாதி தளம்

- ஆயுர்வேதம், சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருந்துப் பொருட்கள் மற்றும் அவை தொடர்பானவற்றிற்கு நிகழ்நேரத்தில் உரிமம் வழங்குவதற்காக மின்னணு முறையிலான ஆஷாதி (e-AUSHADHI) என்ற தளத்தை ஆயுஷ் அமைச்சகத்தின் மத்திய இணை அமைச்சர் புது தில்லியில் துவக்கி வைத்தார்.
- இந்த e-AUSHADHI தளமானது வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல், மேம்படுத்தப்பட்ட தகவல் மேலாண்மை வசதி, மேம்படுத்தப்பட்ட தகவல் பயன்பாடு மற்றும் பொறுப்புடைமையை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் நடைமுறைக்கான கால வரம்பு நிர்ணயிக்கப்படும். மேலும் ஒவ்வொரு நிலையிலும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பதாரருக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியா-வழிநடத்தும் காலநிலைத் தீர்வுகள்

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 மார்ச் அன்று "இந்தியா-வழிநடத்தும் காலநிலைத் தீர்வுகள்" என்ற ஒரு ஆவணத்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சர் ஹர்ஷ் வர்தன் வெளியிட்டார்.
- இந்த ஆவணமானது பருவநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல் மற்றும் அவற்றை ஏற்றுக் கொள்ளுவதற்காக இந்தியா மேற்கொண்டு வரும் முக்கியமான நடவடிக்கைகளைக் குறிப்பிடுகின்றது.


### *இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கியமான முன்னெடுப்புகள்*

- பருவநிலை மாற்றம் மீதான இந்தியாவின் தேசிய செயல் திட்டம்.
    - இது சூரியஒளித் திட்டம், மேம்படுத்தப்பட்ட ஆற்றல் திறன், நீடித்த வாழிடம், நீர், நீடித்த இமாலய சுற்றுச்சூழல், பசுமை இந்தியா, நீடித்த விவசாயம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த யுக்திசார் அறிவு ஆகிய 8 முக்கியமான திட்டங்களைக் கொண்டிருக்கும்.
    - சர்வதேச சூரியசக்தி கூட்டிணைவு (ISA)
    - பருவநிலை மாற்றம் மீதான மாநில செயல் திட்டம் (SAPCC)
    - மின்னணு போக்குவரத்திற்கான "பேம்" (FAME) திட்டம்

- பொலிவுறு நகரங்களுக்கான புனரமைப்பு மற்றும் நகர சீரமைப்பிற்கான அடல் திட்டம்
- தூய சமையல் எரிபொருளைப் பெறுவதற்கான பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா
- ஆற்றல் திறனுள்ள LED விளக்குகளைப் பொருத்துவதற்கான உஜாலா திட்டம்
- சுவச் பாரத் திட்டம்

## கண்ணீர் சிந்தும் பாம்பு - கண்டுபிடிப்பு

- அருணாச்சலப் பிரதேசத்தின் லெபா-ரடா மாவட்டத்தில் "கண்ணீர் சிந்தும் பாம்பு" என்ற புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய நச்சுத் தன்மையற்ற கண்ணீர் சிந்தும் பாம்பின் (ஹெபியஸ் லேக்ரிமா) கண்டுபிடிப்பானது நியூசிலாந்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் விலங்கு வகைப்பாட்டிற்கான மிகப்பெரிய அறிவியல் பத்திரிக்கையான "சூடேக்ஸா" என்ற பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.




- "கண்ணீர் சிந்தும் பாம்பு" என்பது பாம்பின் கண்ணுக்கு கீழே இருக்கும் கருத்த பகுதியைக் குறிப்பிடுகின்றது. இது பாம்பு கண்ணீர் சிந்துவது போன்ற மாயத் தோற்றத்தைக் குறிப்பிடுகின்றது.
- சர்வதேச அளவில் இதுவரையில் கண்டறியப்பட்டுள்ள பாம்பினங்கள் மொத்தம் 3709 ஆகும்.
- அவற்றில் சுமார் 110 இனங்கள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்தவை. அதிலும் அருணாச்சலப் பிரதேசத்தில் மட்டும் 55 வகை பாம்பு இனங்கள் உள்ளன.

- - - - - - - - - - - - - -